நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வி கண்டது

யாழ்பாண பொதுநூலகம்

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 7 இதழ் 39
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 20 — 03 — 1992

[கொழும்பு]

'எயர் லங்கா' விமான நிறுவனத்துக்கு ஆறு விமானங்கள் கொள்வனவு செய்தது தொடர்பாக அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை 66 அதிகப்படியான வாக்குகளால் தோல்வி

(4-ம் பக்கம் பார்க்க)

கருணாநிதியின் மகனுக்கு ஜெயலலிதா பண உதவி

(சென்னை)

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதியின் மூத்த மகன் மு. க. முத்துவுக்கு 5 லட்சம் ரூபா நிதி உதவியை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வழங்கியுள்ளார். தமக்கு உதவவேண்டுமென மு. க. முத்து வேண்டுகோள் விடுத்ததையடுத்தே இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

தண்ணீரூற்றில் குண்டுவீச்சு இளம்பெண் பலி

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு, தண்ணீரூற்று, முள்ளியவளை பகுதியிலுள்ள குடிமனைகளை நோக்கி நேற்று இரு பொம்மர் விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் இளம்பெண் ஒருவர் உடல் சிதறி பலியானார். இருவர் காயமடைந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

★ மணலாறு பகுதியில்

படையினரைமுன்னேறவிடாது புலிகள் தொடந்து கடும் சமர்

(யாழ்ப்பாணம்)

மணலாறு பகுதியில் மும்முனைத் தாக்குதலின் மத்தியிலும் நேற்று மூன்றுவது நாளாக படையினரை முன்னேறவிடாது புலிகள் கடும் தாக்குதல்களை நடத்தினர்கள். இத்தாக்குதலில் படையினர் தரப்பில் பலர் உயிரிழந்த துடன் படையினரின் வாகனங்களும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இப்பகுதியில் தொடர்ந்து நடைபெற்றுவரும் தாக்குதல்களில் நேற்று மும்படையினரின் தாக்குதல்கள் அதிகரித்து காணப்பட்டன.

நேற்று கடலிலிருந்து இடைவிடாத பீரங்கித் தாக்குதலும்விமானங்களின் தொடர்ச்சியான குண்டுத்தாக்குதல்களும் நடத்தப்பட்டதுடன் முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் இராணுவ முகாம்களிலிருந்து குடிமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மும்படையினரின் உதவிகள் இருந்தும் புலிகளின் தாக்குதல்களை சமாளிக்கமுடியாத இராணுவம் பலத்த இழப்புக்களைச் சந்தித்து வருகின்றது.

நேற்றுஇடம்பெற்றமோதல்களில் புலிகள் தரப்பில் வீரவேங்கைஆண்டாள்(யோகேஸ்வரி கந்தையா - வவுனியா,) என்பவர் வீரச்சாவு அடைந்தார். இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ரி-56)

'ஒபரேஷன் ரேசர்' புலிகளால் முறியடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரால் நடாத்தப்பட்ட 'ஒப்ரேசன் ரேசர்' இராணுவ நடவடிக்கை புலிகளின் தாக்குதலினால் முறியடிக்கப்பட்டது.

கடந்த 17 ம் திகதி புலிகளின் முகாமொன்றை தேடியழிக்கும் நோக்குடன் கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமிலிருந்து 300 கும் மேற்பட்ட படையினர் வெளியேறி

(4-ம் பக்கம் பார்க்க)

மட்டுநகரில் குண்டு வெடிப்பு மூவர் பலி; 15 பேர் படுகாயம்

[கொழும்பு]

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள முஸ்லிம் ஹோட்டல் ஒன்றில் நேற்றுக்காலை குண்டு ஒன்று வெடித்ததில் அங்கு இருந்த மூன்றுபேர் கொல்லப்பட்டனர். 15 பேர் காயமடைந்தனர்.

இக்குண்டு வெடிப்பில் ஹோட்டல் முற்றுக சேதமடைந்துள்ளது. குண்டு வெடிப்பில் இறந்தவர்களில் ஒருவர் சிங்களவர், இருவர் முஸ்லிம்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

(மா)

க. பொ. த. [உ/த] பரீட்சை ஏப்ரல் 1ம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

வடபகுதியில் 1991ம் ஆண்டு நடைபெறுத க. பொ. த. [உயர்தர] விசேட பரீட்சை வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதிமுதல் 30-ம் திகதிவரை நடைபெறவுள்ளதாக கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பரீட்சை யாழ்ப்பாணம் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்படி காலப்பகுதியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு சுமார் 10,000 மாணவர் தோற்றவுள்ளனர்.

கொழும்பு மாநகர் எங்கும் பெருமளவு படைகள் குவிப்பு

[கொழும்பு]

கொழும்பு மாநகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதையடுத்து கொழும்பில் பெருமளவு படைகள் குவிக்கப்பட்டு வீதித் தடைகளும் போடப்பட்டு கடுமையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவ

(4-ம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்னைக்கு விரைவில் தீர்வு ஐரோப்பிய குழு நம்பிக்கை

(கொழும்பு)

பிராந்திய அம்சங்களை கருத்துக்கெடுத்து இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வை நாடாளுமன்ற தெரிவுக்குழு விரைவில் எடுக்கும் எனதாம் நம்புவதாக ஐரோப்பிய சமூக தூதுக்குழு தலைவி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் முறைகளை நேரில் பார்வையிட்டுள்ள தெற்காசியா

(4-ம் பக்கம் பார்க்க)

புலிகளுக்கு ஆதரவாக தமிழகம் எங்கும் மாநாடு

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக தமிழ்நாட்டில் பொதுக் கூட்டங்களும் மாநாடுகளும் நடத்தப்படுகின்றன என்று மக்கள் அவையில் அ. தி. மு. க. உறுப்பினர் பி, கே. நாராயணன் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து பிரிந்து தமிழ்நாடு தனிநாடாகமாற வேண்டுமென்று இக்கூட்டங்

(4-ம் பக்கம் பார்க்க)

"விஜயன்வருகைக்குமுன்பே திராவிடர் இங்கு வந்தனர்"

(யாழ்ப்பாணம்)

'விஜயன் வருகைக்கு முன்னரே இலங்கையில் திராவிடர்கள் வாழ்ந்துள்ளார்கள்.'

இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தமிழீழ தாயக படத் திறப்பு விழாவின்போது உரையாற்றிய சமூகவியல் பாட ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டார். தமிழீழ தாயகம் படம் மாணவர்களின் கீதத்துடன், தமிழ் தேசியக்கொடி ஏற்றத்துடன் கல்லூரி அதிபரினால் திரை நீக்கம் செய்யப்பட்டது.

(3-ம் பக்கம் டார்க்க)

புலிகளின் தற்கொலைப் படை தமிழகத்தில்புகுந்துள்ளதாம்

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்த விடுதலைப்புலிகள் இயக்கம் இப்போது தமிழ்நாட்டுக்குள் தற்கொலைப்படையை அனுப்பியிருக்கிறது என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று சட்டசபையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ராஜீவ் காந்தியின் கொலையில் ஈடுபட்ட குற்றவாளிகளை மீட்கவும் இந்தக் கொலையை விசாரிக்கும் மத்திய சிறப்பு புலனாய்வு குழுவினரின் அலுவலகமான மல்லிகையை தகர்க்கவும் அத்தோடு என்னை கொலைசெய்யவும் இந்த கும்பல் திட்டமிட்டிருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலைவழக்கு குற்றவாளிகளை முடிந்தால்

(4ம் பக்கம் பார்க்க)

இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்கள் போராட்ட காலங்களில் காயமுற்ற போராளிகளுக்கு இரத்ததானம் செய்து அவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதன் பிரகாரம் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களும் கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களும் கடந்தவாரம் இரத்ததானம் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துமகளிர் கல்லூரி வளவினுள் அமைந்திருக்கும் 'நடுத்தோட்ட ஸ்ரீ ராஜவரோதயப் பிள்ளையார் ஆலய சங்காபிஷேக உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை உடுக்கிய வலை மஹாகணபதிப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் மஹாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (சு)

0 0

(உடுவில்)

உடுவில் அருள்மிகு ஸ்ரீகாளி அம்பாள்ஆலய சம்புரோக்ஷண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்இன்று 20ம் திகதி காலை 6 25க்கும் 7-30 மணிக்குமிடையில் நடைபெறவுள்ளது. (109)

0 0

(உடுவில்)

சுன்னாகம்ஸ்கந்தவரோதயா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளி பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் திரு. ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும். வைத்திய கலாநிதி திரு. பொ. சிவபாலன் திருமதி கமலாவதி சிவபாலன் ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்கள். (109)

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய 'வணிக ஜோதி' 14வது மலர் வெளியீட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

வெளியீட்டுவிழா செல்வன் பா. வாசவன் தலைமையில் நடைபெறும். பிரதம அதிதியாக யாழ் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதமும் விசேட அதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் (வர்த்தகம்) திரு சி. சிவராசாவும் கலந்து கொள்வர். ஆய்வு ரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. தே. ஜெயராமன் நிகழ்த்துவார்.

நாய்களுக்கு தடுப்பூசி: மருந்துக்கு ரூ.190 கொடுக்க வேண்டுமாம்!

(பருத்தித்துறை)

வடமராட்சிப்பகுதியில் நாய்களை வளர்ப்போர் நாய்களுக்குத் தடுப்பூசி போடுவதற்கு மருந்திற்கு மாத்திரம் நாய் ஒன்றுக்கு 190ரூபா செலுத்தவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் நாய்களுக்குப் போடப்படும் தடுப்பூசிகள் சுகாதாரத் திணைக்களத்தால் அனுப்பப் படாமையினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குச் சென்று நாய்களுக்குத் தடுப்பூசி போடுவது பற்றித் தெரிவிக்கப்படும்போது நாய்களுக்குத் தடுப்பூசிபோட வரும் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் மருந்துக்கு மாத்திரம் 190 ரூபா தரும்படி கேட்கிறார்களாம். (52)

கட்டாக்காலி நாய்களை அழிக்க துரித நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் துரித நடவடிக்கைகளில் பருத்தித்துறை பிரதேச சபையும் சுகாதார திணைக்களமும் இணைந்து ஈடுபட்டுள்ளன.

இப்பிரதேசசபைப் பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரிந்து மக்களுக்குத் தொல்லை கொடுத்துவந்த நாய்கள்அழிக்கப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. எஸ், ஸ்ரீநிவாசனின் உத்தரவையடுத்தே பொதுமக்களுக்குத் தொல்லை கொடுத்து வந்த இக்கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

நாய்களை வளர்ப்போர் தமது நாய்களைக் கட்டி, பொதுமக்களுக்குத் தொல்லை இல்லாத முறையில்வளர்த்துக் கொள்ளுமாறும் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது. (52)

இராசிபலன்

20/03/1992

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு பங்குனி 07)

துதியை மு. இ. 9-27 வரை. அத்தம் மு. ப 8-44 வரை. அமிர்தயோகம். இராகுகாலம் காலை 10-48 முதல் 12-48 வரை. சுபநேரம் காலை 6-18 முதல் 7-48 வரை.

மேடம்: கடமையுணர்வு, சத்தியவாக்கு, பாராட்டு.

இடபம்: மனஉளைச்சல், கடன்சுமை, அலைச்சல்.

மிதுனம்: கற்பனைவாதம், பயணக் களைப்பு, விரோதம்.

கடகம்: மனமகிழ்ச்சி, பந்து விரோதம், பணியாள் சன்மானம்.

சிங்கம்: வேலைப்பழு, விருந்தினர் வருகை, குடும்ப சுகம்.

கன்னி: தொழில் பகை, குடும்ப செலவு, பகைவர் தொல்லை.

துலாம்: பெண் உதவி, அறிஞர் சந்திப்பு, ஆடம்பரம்.

விருச்சிகம்: தொழில் மகிழ்ச்சி, காரியசித்தி, புதிய செய்தி.

தனுசு: வாக்குவன்மை, தானதர்மம், குடும்ப சுகம்.

மகரம்: ஏமாற்றம்,தொழில் நஷ்டம், சபலபுத்தி.

கும்பம்: தகாத நட்பு, குடும்ப பிரிவு, ஆவேசம்.

மீனம்: இனிய சந்திப்பு, வீட்டில் சுபகாரியம், புகழ்.

- ஜோஸ்யர்

நாய்கள் தொல்லை

[சித்தன்கேணி]

சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் வீதிகளிலும் பொது இடங்களிலும் கூடுதலான கட்டாக்காலி நாய்கள்நடமாடுகின்றன. (157)

பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

மனைப்பொருளியல் சேவைக் காலப் பயிற்சி வகுப்பு நாளை 21ம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

சாவகச்சேரி கோட்டத்தை சேர்ந்த சகல பாடசாலை மனைப்பொருளியல் ஆசிரியர்களும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சை

[உடுவில்]

திருநெல்வேலி மாவட்ட அரசினர் விவசாயப்பண்ணையில் படித்த யுவதிகளுக்கான குறுகியகால விவசாய பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்குரிய நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 25-ம் திகதி அரசினர் விவசாயப்பண்ணை அலுவலகத்தில் நடைபெறும். (109)

வரவுபெற்றோம்

அங்கிரஸ வருஷ திருக்கணித பஞ்சாங்கம் - 1992/93.

கணிப்பு - சிவஸ்ரீ. சி. சிதம்பரநாதக் குருக்கள்.

பக்கங்கள் - 104.

விலை: 60-00.

கடந்த நூற்றியைந்து வருடங்களாகக்கணிதசுத்தத்துடன் வெளியிடப்பட்டுவரும் திருக்கணித பஞ்சாங்கம் இவ்வருடமும், நேர்த்தியான முறையில் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது. ஜோதிடம் கற்றோரும் மற்றோரும்பயன்படுத்தத்தக்க வகையில் புதிதாக, பிறநாடுகளுக்குரிய சூரியஉதயம். கிரகபாதசாரம், கிரகசஞ்சாரம் குறித்த பலன்கள் கணிக்கப்பட்டுள்ளன. இந்திய அரசினர் பஞ்சாங்கம், லாகிரி பஞ்சாங்கம், கும்பகோணத்து மடத்துப் பஞ்சாங்கம், அமெரிக்க "றபேல்ஸ் எபமெரிஸ் நோட்டிக்கல் அல்மனெக்" ஆகியவற்றின் கணிப்புக்கு இப் பஞ்சாங்க கணிப்பு ஒத்திருப்பது சிறப்பம்சம்,

துறவி

2ம் ஆண்டு நினைவுநாள்

செல்வி

சிதம்பரநாதர் மகேஸ்வரிதேவி

தோற்றம்: 5-12-1954

மறைவு: 11-4-1990

திதி: 20-03-1992

ஈராண்டு சென்றாலும்
ஓப்பில்லா எம் தெய்வமே
அழியாது உம் நினைவு
என்றும் எம்முடன் வாழும்

உம் பிரிவால் வாடும்:

சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிமார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

சென். மேரிஸ் லேன்,
தும்பளை,
பருத்தித்துறை. [சி-6071]

அரியாலை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்

பதவி வெற்றிடம்

கீழ்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் "பொதுமுகாமையாளர், அரியாலை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், இல. 15 நடுத்தெரு லேன், அரியாலை, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 31-3-92க்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பப்படவேண்டும்.

1. கணக்காளர் - தரம் 104 - 7க்கு அமைய
சம்பளத் திட்டம்:

1165/- — 2170/-
60 X 3 — 75 X 11

இத்துடன் அங்கிகரிக்கப்பட்ட இதர படிகளும்.

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப்பணியாளர் 13வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பளத் திட்டத்தில் கணக்கு சம்பந்தமான பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தில் இடைநிலை பரீட்சையிலான சித்தியும், அங்கிகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) க. பொ. த. (உயர்தரம்) வில் கணக்கியலை உள்ளடக்கிய 3 பாடங்களிலான சித்தியும், அங்கிகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

02. லிகிதர் — தரம் 14
சம்பளத்திட்டம்:

760/- — 1185/-

தகைமைகள்: 25 X 10 — 35 X 5

(அ) கூட்டுறவுப்பணியாளர் 15-வது சம்பளத்திட்டத்தில் லிகிதர் பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16-வது சம்பளத் திட்டத்தில் லிகிதர் பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம், அல்லது

(ஆ) க. பொ. த. (சாதாரணத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் [எண் கணிதம் / வர்த்தக எண் கணிதம் / தூயகணிதம். தமிழ் மொழி என்பனவற்றை உள்ளடக்கியதாக 6 பாடங்களில் சித்தியும், கூட்டுறவுச்சங்கமொன்றில் லிகிதராக ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

03, தட்டெழுத்து லிகிதர்:
சம்பளத்திட்டம்:

304 . 8 — 10 அமைய,
1005/- — 1705/-

40 X 5 — 50 X 10

இத்துடன் அங்கிகரிக்கப்பட்ட இதர படிகளும்.

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 8-வது சம்பளத் திட்டத்திற்கு அமைவாக தமிழ் தட்டெழுத்தாளர் பதவியில் 03 வருட அனுபவம்.
அல்லது,

(ஆ) கூட்டுறவுபணியாளர் 10-வது சம்பளத்திற்கு அமைவான பதவியில் 06 வருட அனுபவம்,
அல்லது,

(இ) க. பொ. த. சாதாரண தரத்தில் 06 பாடங்களில் சித்தியும். அதில் தமிழ் /கணிதம்/தூயகணிதம், தமிழ் தட்டெழுத்தில் பெற்ற திறமைச்சித்தியும், தொழில் நுட்பக்கல்லூரியில் தமிழ் சுருக்கெழுத்து / தட்டெழுத்து (சாதாரண தரத்தில்) சித்தியும் பெற்றமைக்கான சான்றிதழ், அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் பெற்ற சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

04. மேற்பார்வையாளர் தரம் 13.
சம்பளத்திட்டம்:

805/- - 1260/-

25X7 - 35X8

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பளத்திட்டத்தில் லிகிதர் பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவு பணியாளர் 15வது சம்பளத்திட்டத்தில் லிகிதர் பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.
அல்லது

(ஆ) க. பொ. த. (சாதரணம்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண் கணிதம்/தூயகணிதம், தமிழ்மொழி என்பனவற்றை உள்ளடக்கியதாக 05 திறமைச் சித்திகளுடனை 06 பாடங்களில்சித்தியும்,கூட்டுறவுச்சங்கமொன்றில் லிகிதர் பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

1. சங்கப்பணியாளர்களுக்கும், சங்க எல்லைப்பரப்புள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
2. வயதெல்லை: 21 - 40 வருடங்கள்,

இங்ஙனம்
கூட்டுறவு சேவையிலுள்ள,
பொதுமுகாமையாளர்

(சி-6074)

"யாழ். போதனைவைத்தியசாலை

வெளிநோயாளர் பகுதிக்கு வருகின்ற 50 சத வீத நோயாளர் உளரீதியில் பாதிக்கப்பட்டவர்களாகும்

(யாழ்ப்பாணம்)

"யாழ் போதனை வைத்திய சாலையில் அண்மையில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி, வெளிநோயாளர் பகுதிக்கு வரும் ஐம்பது வீதமான நோயாளர்கள் உளரீதியாக பாதிக்கப்பட்டவர்கள். இவர்கள் உளசம்பந்தமான (உளம் சார்ந்த உடல்) மெய்ப்பாடு நோய்க்குட்உட்படிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது"

இவ்வாறு யாழ். போதனை வைத்தியசாலைக் களஞ்சிய அறையில் நடைபெற்ற கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவரும், யாழ். ஆஸ்பத்திரி வைத்திய சுலாநிதியுமான டி. சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: 1983ம் ஆண்டுக்குப் பின்பு அசம்பாவித சம்பவங்களால் ஏற்பட்ட வீளைவுகள் சகலரையும் உளப் பாதிப்பு அடையச்செய்துள்ளது. இந்த உளப் பாதிப்பு வெவ்வேறு பிரிவாக உள்ளது.

முக்கியமாக இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் அண்மைக்கால அசம்பாவிதங்கள், நெருக்கடிகள் பொது மக்கள் மத்தியில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. அது மாத்திரமன்று, உயிர், உடமை இழப்பு, தீவிரமான காயங்கள், அததி வாழ்க்கை போன்ற அவல அனுபவங்கள் உளரீதியாக பெரும் விளைவுகளை ஏற்படுத்தி உள்ளன.

அதிர்ச்சியையும், மனக் குழப்பத்தையும் உண்டாக்கும் அசாதாரண நிகழ்வுகளை 'நெருக்கீடு' எனக் குறிப்பிடுகிறோம். நெருக்கீடு நிகழ்வானது உளஇயக்க ரீதியாக ஒரு மனிதனின் எண்ணக் கருக்கள், உலக மாதிரிகள், எதிர்பார்ப்புகள், நெருங்கிய உறவுகள், தொடர்புகள் போன்றவற்றைச் சிதைத்து நிர்க்கதியான நிலையை உருவாக்கும்.

இதுபோன்ற அசம்பாவிதங்கள் மனதில் ஊடுருவி, ஆழமாகப் பதிந்து மனவடுக்களை விட்டுச்செல்லும்.

பெரியோர்களிடம் இத்தாக்கங்கள் கூடுதலாகத் தென்படும். சிறுவர்களில் உள்ள ஆர்வம், துருவி ஆராயும் ஆவல், கபடமற்ற அப்பாவித்தன்மை, நிகழ்வுகளின் அர்த்தங்களையும் விளைவுகளையும் முற்றுகப் புரிந்துகொள்ளாமல் விளையாட்டுத்தன்மையால் எதிர்கொள்வதால் பாதிப்புக் குறைவாகவே ஏற்படுகின்றது.

மாணவர்கள் இப்போர்க்காலச் சூழ்நிலையில் பல நிலைகளில் உளப்பாதிப்பு அடைய நேரிடுகிறது.

பெற்றோர் வேலைவாய்ப்பின்மை, பொருளாதாரக் கஷ்டங்கள், வீடுகள், சொத்துக்கள் தோட்டம், வயல்கள் இல்லாத நிலைகளிலும் கொடூரமான முறையில் உறவினரின் மரணங்களை நேரடியாகக் காணுதலும், குண்டுவீச்சுக்கு இலக்காதல், கத்தி, கோடரிகளால் வெட்டப்படுதல் குருதிப் பெருக்கம், தமது வீடுகள், முக்கிய நிறுவனங்களின் அழிப்புக்களாலும் – உளப் பாதிப்பு ஏற்படுகிறது.

உளப்பாதிப்படையும் ஒருவருக்கு, கவலை, பயம், அங்கலாய்ப்பு, குழப்பம், சோர்வு, நாணம், அஞ்சி ஓடுங்கும் சுபாவம், இலகுவாக அழுதல், தொட்டாச்சுருங்கித் தன்மை, கலகலப்பற்ற நிலை, எல்லை மீறிய கோபம், சீறி எதிர்க்கும் தன்மை சந்தேகிக்கும் தன்மை போன்றவை ஏற்படுகிறது. இதுபோன்று நடத்தைக் கோளாறுகள், அறிவாற்றல் குறைபாடுகள், மெய்ப்பாடு உடல் சார்ந்த உள நோய்கள் ஏற்படுகின்றன.

இவர்களை இந்த உள நோய்களிலிருந்து மீட்கவேண்டுமானால் சித்திரம், சிற்பம், உளமறி நாடகத்தில் நடித்தல், சங்கீதம், விளையாட்டுப் போன்ற துறைகளில் அவர்களை ஈடுபடச்செய்ய வேண்டும்.

அன்பு, ஆதரவு, பாதுகாப்பு உணர்வு உண்டாக்கி அவர்களோடு நெருங்கி உறவாடி அவர்கள் உளநோயின் சாதகமாக இருக்கவேண்டும்.

பயம், பதற்றம், பதகளிப்பு, அச்சம் போன்றவற்றுக்கு, மந்திர உச்சாடனம், தியானம், சவாசனம், சாந்தியாசனம் செய்யலாம்.

நெருக்கீடு எதிர்த்தாக்கங்களும் அவற்றைக் கையாளும் முறைகள் சம்பந்தமாக பொருத்தமான பிரசாரங்கள், கல்வி முயற்சிகள் சமூகத்தில் ஏற்படுத்துவதன்மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, மக்கள் தமது சுகநலன்களைப் பேண முயற்சிகள் செய்தல்வேண்டும். (சு)

விஜயன்

(1–ம் பக்கத்தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது கி. மு. மூன்றும் நூற்றாண்டுக்கும், கி. மு. முதலாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பெருங்கற் சமாதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பொம்பரிப்பு, குருஹல் கின்ன, கதிரவெளி, படியகம்பொல கொண்ட தெளியவளவைப் பகுதி முதலாய இடங்களில் கண்டெடுக்கப்பட்டது.

இந்த பெருங்கற் சமாதிகளில் இருந்தே எமது தாயகத்தின் தனித்துவம் பெறப்படுகின்றது யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடிகள் பெருங்கற் பண்பாட்டுக்குரியவர்கள்.

தென் இந்தியாவில் இருந்து தொடர்ச்சியாக இலங்கைக்கு மக்கள் வருவதுபலவகைகளாலும் இருந்துவந்தது. சலாகம, துருவ ஆகிய சாதியினரைப் போல கறுவா சாதியினரும் அதன்பின் இலங்கையில் குடியேறிய திராவிடவாதிகளும், பெரும்பாலும் உள்ளடக்கிய ஒரு சாதியினரை என்று மைக்கல்ரெ பேட்ஸ் கூறுவதிலிருந்து தெரிகிறது.

தமிழ்ழீழம் என்பது நாம் ஆண்டாண்டு காலம் வாழ்ந்த பூமி. மூன்று தலைமுறை வாழ்ந்ததென்றே இந்த மண் எங்கள் சொந்தமண் என்பதை கட்டியம் கூறும்.

சுயநிர்ணய உரிமையில் தனித்துவமாக வாழும் பிறிதோர் இனத்துக்குபிரிந்துசெல்லும் உரிமையுண்டு. இந்த உரிமைகளை பெரும்பான்மையினம் தராது போனால் அவர்கள்கஷ்டங்களை அனுபவித்தே தீரவேண்டும்.

இங்கிலாந்திலிருந்து அயர்லாந்து பிரிந்து செல்வது சரித்தியமற்றது என நான் முன்னர் நினைத்தேன். இப்பொழுது அது தவிர்க்க முடியாமல் உள்ளது என நினைக்கிறேன். ஆழ்ந்து ஆராய்ந்ததில் எதிர்நிலையில் ஒப்புக்கொள்ளவேண்டியுள்ளது என இப்பொழுது நான் நம்புகிறேன். அயர்லாந்தைக் கைவிடும் வரை ஆங்கிலத் தொழிலாள வர்க்கம் ஒன்றையும் சாதிக்கப் போவதில்லை என மார்க்ஸின் கூற்று எமக்கும் பொருந்தும். சிங்கள இனம் எமக்கு உரிமை வழங்காத வரை அவர்கள் ஒன்றும் சாதிக்கப்போவதில்லை.

1833ம் ஆண்டில்கோல்புரூக் கொண்டுவந்த ஒற்றையாட்சி தான் இன்றைய நிலைக்குக் காரணமாகும்" என்றார். (சு)

மாணவர்சஞ்சிகை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் அண்மையில் அதிபர் செ. சத்தியநாதன் தலைமையில் முப்பெரும் விழாக்களான சாரணர் இயக்க ஆரம்பவிழாவும்தமிழ்த்தின விழாவும், கலை விழாவும், நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

மாணவர்மன்றத்தின் முதலாவது இதழான 'இளம் தளிர்' சஞ்சிகையை தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வெளியிட்டு வைக்க கோப்பாய் கொத்தணி அதிபர் திரு. த. முத்துக்குமாரசாமி முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

மாணவர் மன்றப் பொறுப்பாளர் கவிஞர் சி. சதாசிவம் தொடக்கவுரை நிகழ்த்தினார். கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி ஆய்வுரை நிகழ்த்தினார். ஆசிரியர் சி. இரகுபதி நன்றியுரை வழங்கினார்.

வைத்திய கலாநிதி டி. சோமசுந்தரம்

கருத்துக் கணிப்பு வெற்றி:

தென்மராட்சி பிரிக்க வரலாற்றில் பெரிய திருப்புமுனை - கிளார்க்

(ஜோகன்ஸ்பேர்க்)

தென்மராட்சி பிரிக்காவில் பெரும்பான்மை ஆபிரிக்க மக்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள தென் ஆபிரிக்க அதிபர் திரு. கிளார்க்கின் அரசியல் சாசன சீர்திருத்தங்களுக்கு பேராதரவு கிடைத்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த வாக்கெடுப்பில் 69வீதமான வெள்ளையின மக்கள் சீர்திருத்தத்திற்கு ஆதரவு நல்கி வாக்களித்துள்ளனர்.

இச்சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்த வலதுசாரி எதிர்க்கட்சி தோல்வி அடைந்துள்ளது.

தென்மராட்சி பிரிக்க வரலாற்றிலேயே இது ஒரு திருப்புமுனையாகுமென தென்மராட்சி பிரிக்க அதிபர் பெட்ரிக் வில்சன் டி கிளார்க் தெரிவித்துள்ளார்.

வெள்ளையரல்லாதோருடன் இவ்வாண்டிறுதிக்குள் இணைந்து இடைக்கால அரசு அமைத்திட திரு. கிளார்க் வாக்குறுதி அளித்துள்ளார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸும் அதன் தலைவர் நெல்சன் மண்டேலாவும் தங்கள் போராட்டம் வெற்றியென்று கூறி மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

உலகத் தலைவர்கள் அனைவரும் தென்மராட்சி பிரிக்க வெள்ளையின மக்களின் இத்தீர்ப்பு குறித்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

(கே)

அன்னை பூபதி நினைவாக உண்ணாவிரதம் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி நினைவாக இடம்பெறும் அடையாள உண்ணாவிரதமும் நினைவுக் கருத்தரங்களும் பல இடங்களில்நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

இன்று 20ம் திகதி இரவு 7 மணிக்கு பண்டத்தரிப்பு பனிப்புலம் அம்மன் கோவிலில் இளையவன், மதிவாணி வாஞ்சிநாதன் ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

21ம் திகதி இரவு 8 மணிக்கு நாகர்கோவில் நாக தம்பிரான் கோவிலில் கருணா, நாவண்ணன், சங்கவியும்

22ம் திகதி பிற்பகல் 7 மணிக்கு அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் நெடுங்கீரன், மதிவாணி, சுடாபி மாஸ்டர் ஆகியோரும்.

23ம் திகதி ஆவரங்கால் சிவன்கோவிலில் கலையரசன், மதிவாணி தேவர் ஆகியோரும் பங்குபற்றுகின்றனர்.

24ம் திகதி இரவு 8 மணிக்கு மட்டுவில் தெற்கு, கேடில்ஸ் மைதானத்தில் சந்திரசேகரன் வாஞ்சிநாதன், இளவேணி ஆகியோரும்

25ம் திகதி இரவு 8 மணிக்கு இத்தாவில் முருகன்கோவிலில் புரட்சி, ஜவான், கடாபி மாஸ்டர், இளவேணியும்.

26ம் திகதி சாவற்காடு சாந்தி சனசமூக நிலையத்தில் இரவு 7 மணிக்கு இளைய வன்மதிவாணி, தமிழன்பனும்.

27ம் திகதி பருத்தித்துறை வியாபாரி மூலை பிள்ளையார் கோவிலில்அரசண்ணை, கடாபி மாஸ்டர், தணிகைச் செல்வனும், 28ம் திகதி இரவு 8 மணிக்கு யாழ் கடற்புலிகளினால் சென் நிக்லஸ் தேவாலயத்தில் சுகுணை, வாஞ்சிநாதன் நாவண்ணனும்.

29ம் திகதி பிற்பகல் 8 மணிக்கு கொடிகாமம் கச்சாய்அம்மன்கோவிலில்கலையரசன், இளநிலா, தமிழன்பனும்

30ம் திகதி பிற்பகல் 8 மணிக்கு கெற்பெலியில் அன்பரசி. சண்முகநாதபிள்ளை சேரலாதன் ஆகியோரும்பங்குபற்றுகின்றனர். (சு)

இன்று இருபெரும் கிரிக்கெட் போட்டிகள்:

88-வது சென். ஜோன்ஸ் - சென்றல்

75-வது சென். பற்றிக்ஸ் - யாழ். கல்லூரி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வருடாவருடம் நடைபெறும் கல்லூரிகளுக்கிடையிலான பிரபல்யம் வாய்ந்த இரு கிரிக்கெட்போட்டிகளும் இம்முறை ஒரே தினத்தில் நடைபெறவுள்ளது.

சென். ஜோன்ஸ்

சென்றல்

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையில் இம்முறை நடைபெறவிருக்கும் 88-வது வருடாந்த கிரிக்கெட்போட்டி இன்று வெள்ளியும், நாளை சனியும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு எம். காண்டீபனும், யாழ். மத்திய கல்லூரி அணிக்கு கே. பிரபாகரனும் தலைமை தாங்குகின்றார்கள்.

சென். பற்றிக்ஸ்—

யாழ்ப்பாணக் கல்லூரி

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டையாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் இம்முறை நடைபெறவிருக்கும் 75வது வருடாந்தக் கிரிக்கெட் போட்டியும், இன்று வெள்ளியும், நாளை சனியும் சென்பற்றிக்ஸ்கல்லூரிமைதானத்தில் நடைபெறவுள்ளது

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு ஜே. ஜே. ஈ. ஏபனும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு எஸ். வீரசுதனும் தலைமை தாங்குகின்றார்கள்.

இப்போட்டிகள் முடிவடைந்த மறுநாள் 22ம் திகதி மேற்படி கல்லூரிகளின் பழைய மாணவர்களுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டியும் நடைபெறவிருக்கின்றது. (வி)

வடக்கில்

'எயிட்ஸ்' தடுப்பு உதவி

(கொழும்பு)

வடபகுதியில் "எயிட்ஸ்" நோய் தடுப்பு பற்றிய உணர்வை மக்கள் மத்தியில் பரப்பவும், நோய் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடவும் உலக சுகாதார ஸ்தாபனம் உதவ முன்வந்துள்ளது. [கே]

பனம் பொருள் உற்பத்தி

[யாழ்ப்பாணம்]

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த வருடத்தில் 29,54,905 போத்தல் பதநீரையும், 1,63,334 போத்தல் பனம் பாணியையும். 97 386 கிலோ வெல்லத்தையும், 15,906 கிலோ பனஞ்சீனியையும், 648 கிலோ பனஞ்டிஇனையும் உற்பத்தி செய்துள்ளதாக தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

தவக்கால நற்சிந்தனை

"கட்டுவோர் விலக்கிய கல்லே மூலைக் கல்லாய் அமைந்தது, ஆண்டவர் செயல் இது" (மத்.21:43)

இறைவன் எமக்கு இது வரை புரிந்த வியத்தகு செயல்களை நினைவு கூருவோம், நன்றி கூறுவோம். அவர் புகழ் பாடுவோம்.

– மோ. தார்சியஸ்

ராஜீவ் கொலை வழக்கில்
வாழப்பாடிக்கு புதிய நெருக்கடி

(சென்னை)

''விசாரணையின்போது சிவராசனின் டைரியை என்னிடம் காட்டினார்கள். வாழப்பாடி இராமமூர்த்தி வீட்டுக்கு ஹரிபாபுடன் சிவராசன் சென்றது பற்றி அதில் எழுதியிருந்தது. மேலும் வாழப்பாடி இராமமூர்த்தியுடன் சிவராசன் போட்டோ எடுத்துக் கொண்டதாகவும் கூட டைரியில் எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறு ராஜீவ் கொலை வழக்கை விசாரிக்கும் தனிக் கோட்டில் பாக்கியநாதன் தாக்கல்செய்த மனுவில் தெரிவித்துள்ளார்.

அம்மனுவில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

என்னைக் கைது செய்து மல்லிகைக்குக் கொண்டு போன சி. பி. ஐ. அதிகாரிகள் என்னைக் கடுமையாக அடித்தனர். அதைத் தொடர்ந்து அறுபது நாட்கள் காவலில் இருந்தபோது என்னைத் துன்புறுத்தினர். போட்டோ கிராபர் ஹரிபாபு பற்றி சி. பி. ஐ என்னிடம் விசாரித்தது.

'ஹரிபாபு ஆறு மாதங்களாகச் சத்தியமூர்த்தி பவனில் உள்ள காங்கிரஸ் அலுவலகத்துக்கு அடிக்கடி சென்று வாழப்பாடி இராமமூர்த்தியைச் சந்தித்துவந்தார்' என்று சொன்னபோது வாயில் குத்தினார்கள். இந்திராகாங்கிரஸ்காரர் பற்றி எதுவும் சொல்லாதே. தி. மு. க. கட்சிக்காரர்களைப் பற்றி ஏதாவது சொல்லென்று மிரட்டினார்கள். ஒரு நாளில் எழுதிக்கொடுத்ததை படிக்கச் சொல்லி வீடியோ பதிவு செய்தனர். என் சம்பந்தமான தஸ்தாவேஜுகளைப் பொலிசார் கோட்டில் தாக்கல் செய்தால் அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது'' என்று பாக்கியநாதன் மேலும் தெரிவித்துள்ளார். (சு)

தங்க பிஸ்கற்றுகள்
பொலிஸாரல் பறிமுதல்

(கொழும்பு)

பத்து லட்சம் ரூபா பெறுமதியான 14 தங்க பிஸ்கற்களும், 14 தங்கச் சங்கிலிகளும் நேற்று முன்தினம் செட்டித்தெருவில் உள்ள கடையொன்றிலிருந்து இரகசியப் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டது.

இதுதொடர்பாக இந்தியர் ஒருவர் உட்பட நால்வர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். (கே)

தமிழக அரசை எதிர்த்து
தி. மு. க. உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழகத்தில் தடா சட்டத்தில் கைதானவர்களை விடுதலை செய்யக்கோரி ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் இம்மாதம் 23ந் திகதி உண்ணாவிரதமிருக்க தி. மு. க. இளைஞர் அணி முடிவுசெய்துள்ளது.

தற்போது சுமார் 150 பேர் 'தடா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு தமிழக சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (மா)

'சுந்தர்' கொழும்பு பயணம்

[யாழ்ப்பாணம்]

யாழ் கல்விப் பணிப்பாளர் இ.சுந்தரலிங்கம் கடந்த புதன் கிழமை இரவு கொழும்பு பயணமானார்.

இவர் கல்விப் பொதுத் தராதர உயர்தர 1991 விசேட பரீட்சை சம்பந்தமாக பரீட்சை ஆணையாளருடன் கலந்துரையாடி, பரீட்சைக்கான வினாத்தாள்களுடன் யாழ்ப்பாணம் திரும்புவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. [சு]

தண்ணீரூற்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி சுமதி சௌந்தரராஜா (26-வயது) என்ற இளம் குடும்பப்பெண்ணே இத்தாக்குதலில் உடல் சிதறிப் பலியானவராவார்.

இவரது கணவரான கந்தசாமி சௌந்தரராஜா 28-வயது) தண்ணீரூற்று வித்தியானந்தா பாடசாலை மாணவியான செல்வி சுபாசினி மாணிக்கவாசகர் (16-வயது) ஆகியோர் பலத்த காயங்களுக்குள்ளாகி யாழ் பொதுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் இருமணிநேரமாக தண்ணீரூற்றுப் பகுதியை நோக்கி சீ-பிளேன் வட்டமிட்ட 10க்கு மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டது. அப்பகுதியில் 10க்கு மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமாகின. (56)

புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குற்றஞ்சாட்டினர். எனவே புலிகள் இயக்கத்தை தடைசெய்ய வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார். (மா)

கொழும்பு மாநகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் குழப்பத்தினையும், பீதியையும் ஏற்படுத்தும் பணி புலிகளின் குழு ஒன்றிடம் அதன் தலைமைப்பீடம் ஒப்படைத்துள்ளதாக புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து பெருமளவு பாதுகாப்புப் படையினரும், பொலிசாரும் நகரில் குவிக்கப்பட்டுள்ளதுடன் சோதனை நிலையங்களையும் இவர்கள் ஏற்படுத்தியுள்ளனராம். [சி]

நம்பிக்கையில்லா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யடைந்தது.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக 54 வாக்குகளும், எதிராக 120 வாக்குகளும் கிடைத்தன.

இவ்வாக்கெடுப்பில் அரசுடன் இணைந்து முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த நான்கு எம். பி. க்களும் கூட்டணியைக் சேர்ந்த இரு எம். பி. க்களும், ஈரோஸ் எம். பி. ஒருவரும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர். [சி]

ஆசிரியர்களுக்கு
விழா முற்பணமாக
ரூ. 1,500 வழங்கப்படும்

(உடுவில்)

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு இவ்வருடத்துக்கான விழா முற்பணமாக ரூபா 1,500 மார்ச்மாத சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளது. அத்துடன் கடந்த வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டபடி ஜனவரி மாதத்தில் இருந்து வழங்கப்பட வேண்டிய நூறு ரூபா பாக்கியுடன் சேர்த்து வழங்கப்பட உள்ளதாகவும் அறியமுடிகின்றது. (109)

கடற்றொழிலாளர் நடத்திய
ஆர்ப்பாட்ட பேரணி

[யாழ்ப்பாணம்]

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர் குடும்பங்களுக்கு இதுவரையில் எதுவித நிவாரணமும் வழங்கப்படாததைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்ட எழுக பேரணி நேற்று நடைபெற்றது.

இப்பேரணி நேற்றுக் காலை ஒன்பது மணிக்கு மானிப்பாய் அர்ச். அந்தோனியார் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி காலை 11 மணியளவில் சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பணிமனையை அடைந்தது.

அங்கு உதவி அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (56)

புலிகளை தடைசெய்ய
ஜெயலலிதா கோரிக்கை

[சென்னை]

விடுதலைப் புலிகள் இயக்கத்தை உடனடியாக தடை செய்யவேண்டுமென்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று சட்டசபையில் தெரிவித்தார்.

மத்திய அரக உடனடியாக விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்ய வேண்டுமென்று இவர் கோரியுள்ளார்.

முதலமைச்சரின் உரைக்குப் பின்னர் தி. மு. க. உறுப்பினர் இளம்பரிதி பேச முயன்ற போது பேரவைத் தலைவர் அனுமதியளிக்காததால் இளம் பரிதி சபையிலிருந்து நேற்று வெளிநடப்பு செய்தார். மா)

கிளிநொச்சி மாவட்டத்தில்
நாய்க்கடிக்கு 8 பேர் பலி;
ஐம்பதுபேர் படுகாயம்

(கிளிநொச்சி)

''கிளிநொச்சி மாவட்டத்தில் நாய்க்கடிக்குள்ளாகி எட்டுப் பேர் மரணமாகியும் ஐம்பது பேர் காயமடைந்தும் உள்ளனர். இந்தநிலையில் கட்டாக்காலி நாய்களை அழிக்க வேண்டியது அவசியமாகின்றது.''

கட்டாக்காலி நாய்கள் ஒழிப்புத் திட்டம் தொடர்பான கூட்டம் கிளிநொச்சி அரசுசார்பற்ற நிறுவன இணையத்தால் நடாத்தப்பட்ட போது தலைவர் திரு. எஸ். சிவராசலிங்கம் இவ்வாறு கூறினார். (83)

'ஒபறேஷன் றேசர்'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரோந்துவந்தனர்.

ரோந்துவந்த படையினரை முந்திரியம் பள்ளம் என்னும் இடத்தில் வழிமறித்து விடுதலைப்புலிகள் பலத்த தாக்குதலை நடத்தினர்கள்,

இத்தாக்குதலில் இராணுவத்தரப்பில் பலத்த உயிரிழப்புகள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

படையினருக்கு உதவியாக ஹெலிகொப்டரிலிருந்து 50 கமாண்டோ தாக்குதல் நடத்தப்பட்டபோதும்புலிகளின் நிலை குலையாத தாக்குதலில் பலத்த இழப்புகளுடன் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர்.

இம்மோதலில் புலிகள் தரப்பில் கப்டன் சேது (சின்னத்துரை ரவிச்சந்திரன், கோவில் போரதீவு), லெப். தீபன் (சுந்தரம் சுதாகரன், ஆண்டாள்வெளி), 2ம் லெப். விதுரன் (சந்தையடி ஜீவா துணுவில எஸ்டேட்) ஆகிய போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்தபுலிகளுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர், (ரி)

ஹமில்டன் விரைவு

(கொழும்பு)

கூட்டுப்படை தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா நேற்று மணலாறு பகுதிக்கு விமானம் மூலம் சென்றார்.

இப்பகுதிக்கு நேற்றுமுன்தினம் இராணுவ தளபதிகள் சிலில் வைத்தியரத்னவும், டென்சில் கொப்பேகடுவவும் சென்றதும் குறிப்பிடத்தக்கது. (மா)

உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு விஞ்ஞல் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம் வருமாறு.

குருநகர் பாடும்மீன் (மஞ்சள் அணி) எதிர் வீனஸ் அணி மோதும். யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் இப்போட்டி நடைபெறும்.

கருணாநிதியின்

(1 ம பக்கத் தொடர்ச்சி)

கோள் விடுத்ததின் அடிப்படையில் இந்த உதவியை முதலமைச்சர் அளித்துள்ளதாக அ. தி. மு. க. செய்தி தெரிவிக்கின்றது. (மா)

மரண அறிவித்தல்

ஆறுமுகம் சுப்பிரமணியம்

(முன்னாள் இ. போ. ச. நடத்துனர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை மணியகாரன் வீட்டடியை வசிப்பிடமாகக் கொண்ட வரும் தற்பொழுது நெல்லியடி புரூப்பொறுக்கி ஆலடியில் வசிப்பவருமாகிய ஆறுமுகம் சுப்பிரமணியம் 18-03-1992 ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வர்களான ஆறுமுகம் - சிவக்கொழுந்துவின் அருமை மகனும், இராசமணியின் அன்புக்கணவரும், தேவி, லோகன் [பிரான்ஸ்], மோகன் (பிரான்ஸ்), வதனி, மஞ்சுளா [பிரான்ஸ்], ரதன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், தருமலிங்கம், மலர் [பிரான்ஸ், இந்திராணி [பிரான்ஸ்], பாஸ்கரன், நந்தகுமார் [பிரான்ஸ்], ஆகியோரின் அன்பு மாமனாரும், மதிஒளி [ஜேர்மனி], அருள்ஒளி, அறிவுபொழி, அன்புபொழி, மலர்ஒளி, எழில் வேந்தன், துஷ்யந்தினி [பிரான்ஸ்], ஷாமினி [பிரான்ஸ்], தர்ஷன் [பிரான்ஸ்], நிஷாந்தன் [பிரான்ஸ்], சுசீகரன் ஆகியோரின் அன்புப்பேரனும் மற்றும் காலஞ்சென்ற மீனாட்சியின் அருமைச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-03-1992 புதன்கிழமை அன்று வல்லை மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தகவல்:
ம. பாஸ்கரன்
[மருமகன்]

புரூப்பொறுக்கி,
நெல்லியடி.
(சி 6076)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number P/10336/91.